**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.</u>**

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | : 14/2025 | வா.சா. | : 1 |
| பெயர் | : ஜெஸ்ஸிமா | த/பெ. | : லியாகத்அலி |
| தாலுகா | : மதுரை | கிராமம் | : நாராயணபுரம் |
| தேதி | : 04.02.2026 | வயது | : 64/2026 |

1969–ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44–ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்:

<u>வாதி தரப்பில் முதல் விசாரணை</u>

1. நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். நான் இந்த வழக்கை பிரதிவாதிகளுக்கு எதிராக தானசெட்டில்மெண்ட் ஆவணம் செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை செய்யக் கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்துள்ளேன். எனக்கு இவ்வழக்கு பற்றிய விபரங்கள் நன்கு தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை நான் படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விபரங்கள் எனக்கு நன்கு தெரியும். எனது வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை வாதி தரப்பு சாட்சியமாக ஏற்றுக் கொண்டு எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்களை வாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1) 03.08.2000ம் தேதியில் எனக்கு, என் சகோதரர் கமால் எழுதிக்கொடுத்த ஹிபா என்ற தானசெட்டில்மெண்ட் ஆவணம் (ஆவண எண்.1019/2000) சான்றிட்ட நகல் – வா.சா.ஆ.1 ஆகவும்,

2) 02.12.2001ம் தேதியிட்ட எனது பெயரிலுள்ள பட்டா (பட்டா எண்.1317) – அசல் – வா.சா.ஆ.2 ஆகவும்,

3) வழக்குச் சொத்துக்களுக்கு எனது பெயரிலுள்ள கிஸ்தி ரசீதுகள் (எண்ணிக்கை–6) அசல் – வா.சா.ஆ.3 ஆகவும்,

4) 09.08.2004ம் தேதியில் நான் முகம்மது அப்துல் கனி என்பவருக்கு கொடுத்த ஈடுகடன் ஆவணம் – சான்றிட்ட நகல் – வா.சா.ஆ.4 ஆகவும்,

5) 04.10.2010ம் தேதியில் மேற்படி ஈடுகடனை செலுத்தியதற்கான செல் ரசீது ஆவணம் சான்றிட்ட நகல் – வா.சா.ஆ.5 ஆகவும்,

6) 14.09.2001ம் தேதியில் எனது பெயரிலுள்ள தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை கமால் ரத்து செய்து எழுதிய ரத்து பத்திரம் (ஆவண எண்.1161/2001) சான்றிட்ட நகல் – வா.சா.ஆ.6 ஆகவும்,

7) 16.07.2021ம் தேதியில் கமால் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்த ஹிபா என்ற தானசெட்டில்மெண்ட் ஆவணம் (ஆவண எண்.1576/2021) – சான்றிட்ட நகல் – வா.சா.ஆ.7 ஆகவும்,

8) 26.07.2022ம் தேதியில் கமால் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்த ஹிபா என்ற தானசெட்டில்மெண்ட் ஆவணம் (ஆவண எண்.2231/2022) – சான்றிட்ட நகல் – வா.சா.ஆ.8 ஆகவும்,

9) 26.07.2022ம் தேதிய பிழை திருத்தல் பத்திர ஆவணம் (ஆவண எண். 2232/2022) சான்றிட்ட நகல் – வா.சா.ஆ.9 ஆகவும்,

10) 24.02.2023ம் தேதிய 1 முதல் 3 பிரதிவாதிகள் 4ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த ஹிபா என்ற தானசெட்டில்மெண்ட் ஆவணம் (ஆவண எண்.587/2023) – சான்றிட்ட நகல் – வா.சா.ஆ.10 ஆகவும்,

11) 24.02.2023ம் தேதிய 1 முதல் 3 பிரதிவாதிகள் 5ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பரிவர்த்தனை ஆவணம் (ஆவண எண்.588/2023) – சான்றிட்ட நகல் – வா.சா.ஆ.11 ஆகவும்,

12) 03.11.2023ம் தேதிய தாவா சொத்திற்குரிய வில்லங்க சான்று – இணையதள பதிவிறக்க நகல் – வா.சா.ஆ.12 ஆகவும்,

13) 17.02.2025ம் தேதியில் வாதி காவல் நிலையத்திற்கு அனுப்பிய புகார் மனு (20.02.2025 தேதிய அசல் அஞ்சலக ரசீதுடன் கூடியது) கைநகல் – வா.சா.ஆ.13 ஆகவும்,

14) மேற்படி புகார் மனுவை காவல் நிலையத்தில் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக இணையதள கணிணி அறிக்கை பதிவிறக்கம் செய்யப்பட்டது – வா.சா.ஆ.14 ஆகவும்,

15) 17.02.2025 ம் தேதி நான் மாவட்ட பத்திர பதிவாளர் அவர்களுக்கு சட்டத்திற்கு முரணான ஆவணங்களை ரத்து செய்ய அனுப்பிய புகார் மனு (20.02.2025 தேதிய அசல் அஞ்சலக ரசீதுடன் கூடியது) – கைநகல் – வா.சா.ஆ.15 ஆகவும்,

16) 21.12.2025 ம் தேதிய மேற்படி மனுவை பத்திரப் பதிவாளர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக இணையதள கணிணி அறிக்கை பதிவிறக்கம் செய்யப்பட்டது – வா.சா.ஆ.16 ஆகவும்,

17) 04.02.2004 ம் தேதிக்கான மின் கட்டண அட்டை மற்றும் ரசீது அசல் – வா.சா.ஆ.17 ஆகவும்,

18) பல்வேறு தேதிகளில் நான் வழக்கு சொத்திலுள்ள தென்னைமரத்திலிருந்து தேங்காய் எடுத்து கடைக்கு விற்றதற்கான ரசீதுகள் (எண்ணிக்கை–3) அசல் – வா.சா.ஆ.18 ஆகவும்,

19) 07.03.2025 ம் மாவட்ட பதிவாளர் அலுவலகம் திண்டுக்கல்லிலிருந்து எனக்கு வந்த ந.க.எண்.1010/ஆ 3/2025 சார்பு நகல் – வா.சா.ஆ.19 ஆகவும்,

20) பிரதிவாதிகள், வாதிக்கு சார்பு செய்த கேவியட் மனு சார்பு நகல் – வா.சா.ஆ.20 ஆகவும்,

21) அளவை சான்று சார்பு நகல் – வா.சா.ஆ.21 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

மேற்கண்ட ஆவணங்கள் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.21 வரை குறியீடு செய்யப்படுகிறது.

**வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 04.02.2026 கையெழுத்து செய்துள்ளார்.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.02.04 21:11:37 +0530

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.